# பத்திரிக்கை செய்தி

## வர்த்தக உரிமம் வழங்க ரூ.5,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய சுகாதார அலுவலர் கைது

புகார்தாரர் திரு.சரவணன், அரபெருஞ்செல்வி தெரு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தண்ணீர் சுத்திகரிப்பு கம்பெனி நடத்தி வருகின்றார். தன்னுடைய கம்பெனிக்கு வர்த்தக உரிமம் வேண்டி காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த திரு.பிரகாஸ், சுகாதார அலுவலர், அரசுக்கு செலுத்த வேண்டிய விண்ணப்ப கட்டணம் ரூ.3,000/-யை தன்னுடன் பணிபுரியம் திருமதி.நர்கீஸ், ஊழியருக்கு கூகுள் பே மூலமாக அனுப்ப அறிவுறுத்தியுள்ளார். புகார்தாரர் கடந்த 16.04.2025ம் தேதி கூகுள் பே மூலமாக திருமதி.நர்கீஸ்க்கு அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணத்தை அனுப்பியுள்ளார். மேலும் விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.பிரகாஸ், சுகாதார அலுவலர், காஞ்சிபுரம் மாநகராட்சி அவர்கள் தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காஞ்சிபுரம் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் 23.04.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பிரகாஸ், சுகாதார அலுவலர், லஞ்ச பணம் ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.